## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(மே/யூன் 2011)

LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka

## CC 103 இணைந்த பாடநெறி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**இவ்வினாத்தாளில் மொத்தமாக எட்டு வினாக்கள் உள்ளன.**
**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

01. புவியியலின் உப பிரிவுகளை எடுத்துக்காட்டி அவை பற்றி சுருக்கமாக விளக்குவதுடன் அண்மைக் காலங்களில் அதன் உள்ளடக்கத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றியும் கருத்துரைக்குக.
(20 புள்ளிகள்)

02. (1) "வரலாறு" என்பதனால் கருதப்படுவது என்ன? (06 புள்ளிகள்)
(2) வரலாற்றுக்கும் தொல்லியலுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (07 புள்ளிகள்)
(3) வரலாற்றாய்வாளன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகள் எவை?
(07 புள்ளிகள்)

03. (அ) "சமூகவியல்", "மானுடவியல்" என்பவற்றுக்கான விளக்கத்தைத் தருக.
(06 புள்ளிகள்)
(ஆ) "சமூக நிறுவனங்கள்" என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு, சமூக நிறுவனங்கள் சிலவற்றைத் தருக.
(07 புள்ளிகள்)
(இ) "சமூகமும் பண்பாடும்" என்பது பற்றி தெளிவுபடுத்துக.
(07 புள்ளிகள்)

04. மெய்யியல் எவ்வாறு சமூக முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்யலாம் என்பதனை விளக்குக.
(20 புள்ளிகள்)

05. (அ) அரசியல் யாப்பு அல்லது அரசியல் திட்டம் என்றால் என்ன?
(05 புள்ளிகள்)
(ஆ) அரசியல் யாப்புக்களின் நவீன வகைப்பாடுகளை விளக்குக.
(15 புள்ளிகள்)

06. நுண்கலைகளை வகைப்படுத்தி, அவற்றின் பண்புகளை விளக்குக.
(20 புள்ளிகள்)

07. தமிழ் 'செம்மொழி' என்று கருதப்படுவதற்கான காரணங்கள் யாவை? தெளிவுபடுத்துக.
(20 புள்ளிகள்)

08. இன்றைய நடைமுறை உலகில் காணப்படும் பொருளாதார அமைப்பு முறைகளை விளக்குவதுடன், சில நாடுகள் நிலைமாற்றுப் பொருளாதாரங்களாக மாறி வருகின்றமைக்கான அடிப்படைக் காரணங்களையும் தெளிவுபடுத்துக.
(20 புள்ளிகள்)

*******